# கல்லூரியில் கருத்தரங்கு




**திருவள்ளூர், மார்ச் 24:**

**திருவள்ளூர் மாவட்டம், பெருமாள்பட்டு ஸ்ரீராம் பொறியியல் கல்லூரியில் ஆட்டோமொபைல் துறை சார்பாக மூன்றாவது தேசிய அளவிலான கருத்தரங்கு நடைபெற்றது.**

ஆட்டோமொபைல் மற்றும் இயந்திரவியல் துறைகளின் எதிர்கால வளர்ச்சி 2018 என்னும் தலைப்பில் 23ம்தேதி நடைபெற்ற இந்த கருத்தரங்கில் துறைத்தலைவர் பேராசிரியர் ஆ. இராஜேந்திர பிரசாத் அனைவரையும் வரவேற்றார். கல்லூரி இயக்குனர் முனைவர் எ. கோபாலகிருஷ்ணன் மற்றும் கல்லூரி முதல்வர் முனைவர் கு.கீ. கண்ணனண் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆட்டோமொபைல் துறை பேராசிரியர்

சிறப்பு விருந்தினராக ஹுண்டாய் மோட்டார் இந்தியாவின் பொது மேலாளர் மற்றும் குழு தலைவர் -பவர்ட்ரைன் பிரிவு,கீ. பாபு கலந்து கொண்டு வாகன பயன்பாடு, மின்சார வாகனங்களின் எதிர்காலம் மற்றும் மாணவர்கள் தொழிற் சாலைகளில் பணியாற்ற தங்களது தனித்திறன்கள் மற்றும் தலைமை பண்புகள் குறித்து சிறப்புரை ஆற்றினார்.

இக்கருத்தரங்கில் தேசிய அளவிலான 100 க்கும் மேற்பட்ட ஆராய்ச்சிக் கட்டுரைகள் சமர்பிக்கப்பட்டன.

சிறந்த கட்டுரைகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. பேராசிரியர் க. விக்னேஷ் நன்றி கூறினார். இதற்கான ஏற்பாடுகளை பேராசிரியர்கள் எ. பாலசந்தர், அ.கீ. விஸ்வநாதன்,



திருவள்ளூர் மாவட்டம், பெருமாள்பட்டு ஸ்ரீராம் பொறியியல் கல்லூரி ஆட்டோ மொபைல் துறை சார்பாக நடைபெற்ற மூன்றாவது தேசிய அளவிலான கருத்தரங்கை ஹூண்டாய்மோட்டார் இந்தியா பொதுமேலாளர் ஆர்.பாபு துவக்கி வைத்தார். துறைத்தலைவர் பி.இராஜேந்திரபிரசாத், கல்லூரி இயக்குனர் ஜி.கோபாலகிருஷ்ணன், மற்றும் முதல்வர் எஸ்.கண்ணன், துறைபேராசிரியர் ஜி.மகேஷ், பேராசிரியர் பி.விக்னேஷ் ஆகியோர் கலந்து கொண்டனர். விழா ஏற்பாடுகளை பேராசிரியர்கள் ஜி.பாலசந்தர், ஏ.ஆர்.விஸ்வநாதன், டி.ஜெகதீஷ் மற்றும் ஏ.மோஷின்அஹமது ஆகியோர் செய்திருந்தனர்.